# காரமடை நகராட்சி

2023 ம் ஆண்டு மே மாதம் 31ம் நாள் புதன் கிழமை முற்பகல் 11.00 மணிக்கு காரமடை நகரமன்றத்தின் அவசரக் கூட்டம், காரமடை நகரமன்ற கூட்டத்தில், நகரமன்றத் தலைவர் அவர்களால் கூட்டப்பட்டுள்ளது. இக்கூட்டத்தில் நகரமன்றத் துணைத்தலைவர் மற்றும் அனைத்து நகரமன்ற உறுப்பினர்கள் தவறாது கலந்துகொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது.

## முன்னிலை : திருமதி.உஷா வெங்கடேஷ், நகரமன்றத் தலைவர்

ஒ.ம்/ திருமதி.உஷா வெங்கடேஷ்
நகரமன்றத் தலைவர்,
காரமடை நகரமன்றம்.

---

**நகர்மன்றத் தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.**

காரமடை நகராட்சி 19.827 ச.கி.மீ பரப்பளவு உள்ள 27 வார்டுகளை கொண்ட இரண்டாம் நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கீட்டின்படி 35166 மக்கள் தொகையும், 2023ம் ஆண்டின்படி 44226 மக்கள் தொகை கொண்டுள்ளது. இந்நகராட்சியில் 2022–2023ன்படி 14455 குடியிருப்புகளும், 1666 வணிகம் மற்றும் தொழில்நிறுவன கட்டிடங்கள் உள்ளன. காரமடை நகராட்சிக்கு தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் முதல் மற்றும் இரண்டாவது தனிக்குடிநீர் திட்டங்கள் இரண்டையும் சேர்த்து 4.99 MLD குடிநீர் பெற வடிவமைக்கப்பட்டது. ஆனால் தற்போது தேக்கம்பட்டி சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள முதல் குடிநீர் திட்டத்திற்கான 2.94 MLD வடிகட்டி படுகைகள் முழுமையாக இயங்காமல் உள்ளது. இரண்டாவது குடிநீர் திட்டத்திற்கான 2.05 MLD வடிகட்டி படுகைகள் மட்டும் இயக்கப்பட்டு வருகிறது. இதனால் வடிவமைக்கப்பட்ட 4.99 MLD குடிநீர் கிடைக்காமல் குறைவான அளவு குடிநீர் பெறப்பட்டு வருகிறது. இதனால் காரமடை நகராட்சி மக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்ய இயலாமல் உள்ளது. எனவே தேக்கம்பட்டி சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள முதல் குடிநீர் திட்டத்திற்கான 2.94 MLD வடிகட்டி படுகைகள் இயங்குவதற்கான பணிகள் மேற்கொள்ளப்படவேண்டும். மேலும் தற்போதைய மக்கள் தொகையின்படி நபர் ஒருவருக்கு 135 லிட்டர் வீதம் 5.97 MLD குடிநீர் தேவைப்படுகிறது. மேலும் இந்நகராட்சி வெகுவிரைவாக வளர்ந்து வரும் நகராட்சியாக உள்ளதாலும், குடியிருப்பு பகுதிகள் அதிகளவில் கட்டப்பட்டு வருவதாலும் அனைத்து குடியிருப்புகளுக்கும் தடையின்றி சீரான குடிநீர் விநியோகம் செய்ய ஏற்கனவே நடைமுறையில் உள்ள தனிக்குடிநீர் திட்டத்தை சீரமைப்பு பணி செய்யவும், ஏற்கனவே வடிவமைக்கப்பட்டுள்ள 4.99 MLD குடிநீர் திட்டத்துடன் கூடுதலாக 5.00 MLD மொத்தம் 10.00 MLD குடிநீர் கிடைக்க திட்டம் செயல்படுத்திட பிரேரணை தயாரிக்கவும், அதற்கான திட்ட நிதி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

**பொருள் எண்.02**

காரமடை நகராட்சிக்குட்பட்ட கோவை–மேட்டுப்பாளையம் பிரதான சாலையில் Teachers Colony பேருந்து நிறுத்தம் அருகில் முதல் குடிநீர் திட்டத்தின் பம்பிங் மெயின் குழாய்கள் பழுதடைந்துள்ளது. ஆதலால் தேசிய நெடுஞ்சாலைத்துறைக்குட்பட்ட சாலையில் Trenchless Method பயன்படுத்தி காரமடை தெற்கு பகுதிக்கு செல்லும் குழாயில் இருந்து வடக்கு பகுதிக்கு செல்லும் பம்பிங் மெயின் குழாய்களில் Interlink செய்யவும், 250mm AC Pipe மற்றும் Specials வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.10.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>பொருள் எண்.03</u>**

காரமடை நகராட்சிக்குட்பட்ட கிட்டாம்பாளையம் நீருந்து நிலையத்திலிருந்து வார்டு எண்.14 டி.ஜி.புதூர் பகுதி வரை உள்ள பம்பிங் மெயின் மற்றும் பகிர்மானக் குழாய்களில் (300mm விட்டமுள்ள AC Pipe) ஏழு இடங்களில் உடைப்பு ஏற்பட்டு குடிநீர் விநியோகம் பாதிக்கப்பட்டதால் பொது மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே பம்பிங் மெயின் மற்றும் பகிர்மான குழாய்கள் உடைப்பு சரிசெய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.10.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ஒ.ம்/ திருமதி.உஷா வெங்கடேஷ்
நகரமன்றத் தலைவர்,
காரமடை நகரமன்றம்.

**<u>31.05.2023 ஆம் நாள் நடைபெற்ற நகரமன்ற அவசர கூட்டத்தின் தீர்மானங்கள்</u>**

**<u>பொருள் எண்.01</u>**

திட்ட நிதி பெற்று குடிநீர் திட்டத்தினை நடைமுறைப்படுத்த ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.02 மற்றும் 03</u>**

அனுமதிக்கப்பட்டது.

ஒ.ம்/ திருமதி.உஷா வெங்கடேஷ்
தலைவர்,
காரமடை நகர்மன்றம்